**அபிவெனுவென் அபி நிதியம் - 2013**

---

அபிவெனுவென் அபி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசோட்டக்கூற்று மற்றும் முதலீட்டுப் பதிவேடு போன்றவற்றை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 06 ஆம் இலக்க அபிவெனுவென் அபி நிதிய அதிகாரச்சட்டத்தின் 11(7) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான

உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை அபிவெனுவென் அபி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகளிலிருந்து தோன்றிய நிதி விளைவுகள் ரூபா 67,561,567 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 31,995,802 ஆக இருந்தது. அதன் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 35,565,765 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 35,565,765 அதிகரிப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலைமைக்காக செலவினத்திற்கும் வருமானத்திற்குமிடையே பின்வரும் முரண்கள் காரணமாக இருந்தன.

(அ) நன்கொடை வருமானம் ரூபா 120,466,062 இனால் அல்லது 342 சதவீதத்தினால் அதிகரித்தமை.

(ஆ) பரிவர்த்தனைக் கோபுர கட்டண வருமானம் ரூபா 40,754,527 இனால் அல்லது 36 சதவீதத்தினால் அதிகரித்தமை.

(இ) ரணஜயபுர வீடமைப்பு செயற்திட்டத்தின் தவணைப்பண வருமானம் ரூபா 3,164,346 இனால் அல்லது 45 சதவீதத்தினால் அதிகரித்தமை.

(ஈ) முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 14,483,785 இனால் அல்லது 18 சதவீதத்தினால் அதிகரித்தமை.

(உ) காப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காப்பு விற்பனை வருமானம் ரூபா 2,602,234 இனால் அல்லது 272 சதவீதத்தினால் அதிகரித்தமை.

(ஊ) செயற்திட்ட செலவினம் ரூபா 144,847,955 இனால் அல்லது 54 சதவீதத்தினால் அதிகரித்தமை.

(எ) பெறுமானத் தேய்வு ரூபா 1,059,288 இனால் அல்லது 5892 சதவீதத்தினால் அதிகரித்தமை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

### 4.1 செயலாற்றல்

-------------------------------

2008 இன் 06 ஆம் இலக்க ''அபிவெனுவென் அபி'' நிதிய அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் ஆயுதப்படை சேவைகளின் அங்கத்தவர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் வகையில் நிதி உதவிகளை வழங்குவதற்கான உத்தேசத்திட்டத்தை ஏற்படுத்துதல், தகைமைகளைப் பெறுகின்ற ஆயுதப்படை இராணுவ அங்கத்தவர்களுக்கு வீட்டு வசதிகளைப் பெறுவதற்கான உதவிகளை வழங்குதல், ஆயுதப்படை சேவை அங்கத்தவர்களின் மூலம் நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெறுவதற்காகவும் அக்கடனை செலுத்துவதற்காகவும் உதவிகளை வழங்குவதற்காக ஏற்பாடுகளை மேற்கொண்டு ஆயுதப்படை இராணுவ அங்கத்தவர் ஒருவர் மரணமடைகின்ற சந்தர்ப்பத்தின் போது அல்லது மோதலின் போது அல்லது ஏனைய சந்தர்ப்பத்தின் போது அங்கங்களில் நிரந்தரமாக அங்கவீனமடைகின்ற சந்தர்ப்பத்தின் போது அல்லது காயங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது கடனை மீளச் செலுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உத்தேசத்திட்டத்தைத் தயாரித்தல் நிதியத்தின் நோக்காகவும் இலக்காகவும் இருந்தது.

எவ்வாறாயினும் மீளாய்வாண்டு வரையில் நிதியம் உருவாக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மேற்கூறப்பட்ட நிதியத்திலிருந்து தகைமை பெறுகின்ற ஆயுதப்படை இராணுவ அங்கத்தவர்களுக்கு வீட்டு வசதிகளை வழங்குவதற்கான உதவிகளை வழங்குவதற்கு மாத்திரமே நிதியம் கவனம் செலுத்தியிருந்தது. நிதியத்தின் ஒட்டுமொத்த சொத்துக்களிலிருந்து 90 சதவீதம் அல்லது ரூபா 821,046,485 தொகையான திறைசேரி உண்டியல் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதியம் முதலீடு செய்வதைத்தவிர மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அப்பணத்தை ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பாதுகாப்பு அமைச்சரினால் 2009 சனவரி 23 ஆந் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எம்ஓடீ/எப்டீ/ஐஏ/5/3/(2) ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்புக்கள் தொடர்பாக 2009 பெப்ரவரி 03 ஆந் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பிற வழிகளிலிருந்து கிடைக்கின்ற சகல பெறுவனவுகளும் ஒன்றிணைந்த நிதியத்தில் ''செலவு'' வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்யதாகவும், அவ்வாறு ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்படுகின்ற சகல வருமானமும் ''அபிவெனுவென் அபி'' நிதியத்திற்காக மானியமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதாகவும் அரசாங்க பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சுச் செயலாளரினால் முப்படைகள், பொலிஸ் திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் போன்ற நிறுவகங்களுக்கு 2009 நவம்பர் 11 ஆந் திகதிய எப்டீ/ஐஏ/05/03(2) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை எந்த வருடத்திலும் மாற்று வழிகளிலிருந்து உழைக்கப்படுகின்ற வருமானம் ஒன்றிணைந்த நிதியம் ஊடாக ''அபிவெனுவென் அபி'' நிதியத்திற்கான மானியமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இபலோகம ரணஜயபுர வீடமைப்பு செயற்திட்டத்திலிருந்து வீடுகளைப் பெற்றுக்கொண்ட முப்படை அங்கத்தவரிடமிருந்து ஒரு வீட்டிற்காக ரூபா 800,000 தொகை ரூபா 4,000 படி 200 மாதாந்த தவணைகளில் அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின்

இறுதியளவில் ரூபா 1,762,996 தொகையான நிலுவைத் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு நிதியம் தவறியிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்திற்கு ஆகக்குறைந்தது 03 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் நிதியத்தினால் ஆண்டின் ஆரம்பத்தின் போது தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 ஆம் ஆண்டு மற்றும் அதிலிருந்து எதிர்காலத்திற்கு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் நிதியத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கடன் தவணைப் பணத்தை அறவிடுதல்
(ஆ) பணத்தை முதலீடு செய்தல்
(இ) திட்டங்களைத் தயாரித்தல்